# தையல் நாயகி

கு. நா. சுந்த்ரேசன்

முதியரே அன்றியும், அன்னையர் இடுப்பினில்
வதிந்து, பக்திகள் யாதென அறியா
மதலையும், கரும்சுருள் தலைமுடி பலிதரும்
சிரத்தையை நின் தையல் நாயகி காண
திருத்தலம் இதில் உறை வைத்திய நாதனே!
பொருத்தமோ யாது, நின் தேவியின் பெயரே?

(''தையலார்'' என்ற சொல்லுக்கு, ''சுமங்கிலிகள்'' என்று பொருள்
தக்கதாதலால், சுமங்கிலிக்குள் சிறந்தோள் தேவி -- என்பதாலோ?)

அயிர்க்கின்றேன்:

தைத்திங்கட் குளிர்நோன்பால் கன்னிமார்கள்
முன்னை நாளில்
''வைத்தருள் நீ, நற்கணவர் நலம் பெறற்கே!'' எனவேண்டி
மணந்த பின்னர் விரதம் அஃதை அயருதல் விடுத்ததாலே
துணர்முல்லைச் சுமங்கிலிகள் தைஅல்லார் ஆயினரோ?
தையல்லாரும் தையல்மாரும் மனையோர் ஆயின்,
தையற்குழாத்து நாயகி, நின் தேவி அன்றோ?

(வியாதி நீங்குவது, கிழிசல் துணியைத் தைத்துச் சீர்செய்வது
போல்வதாதலால் உவமைப் பெயரோ இது, தேவிக்கு?)

வியக்கின்றேன்:

நோயுற்ற துன்புஉடலைச் சீர் உறுத்த முன்னை நாட்போல்,
''மாயமாய் எம் பிணி நீக்கு, நலம் பெறற்கே!'' என வேண்ட
அழுதோரின் ஊறு ஒழித்து ஆரோக்யம் கொடுத்ததாலே
கிழிசலொன்றை ஊசியினால் தைத்தபோல் ஆயினரோ?
நையல் இன்றி ஒப்பிட்டார் அங்கன் ஆயின்
தையல் உவமை நாயகி, நின் தேவி அன்றோ?

(மருத்துவத்தில் சஸ்திர முறைப்படி, கத்தியால் கிழித்துத்
தைப்பதுமுண்டாதலால், தேவிக்கு வந்த தொழிற்பெயரோ இது?)

நயக்கின்றேன்:

உத்திபல தோல்வியுற, இன்றுபோல முன்னை நாளும்
"கத்திகொண்டும் சதை அறு நீ, நலம் பெறற்கே!" என வேண்டின்,
அறுவைசெயக் கருதிநின்ற நின் அருகே அடுத்ததாலே
திறல் ஊசி அவள்தரவே மீண்டுசெம்மை ஆயினரோ?
உய்யலுற்றார் சஸ்திரத்தால் மேனி ஆயின்
தையற்றையள் நாயகி, நின் தேவி அன்றோ?

(வருகிற நோய் எதுவும், அகலும் போது உடம்பிலே யாதோ ஒரு அடையாளம்
வைத்துவிட்டுப்பொஒவதால், கடவுள் அருளை நினைவு கூர முடிகிறது)

அஃதன்றி,

"ஊசி தைத்த கிழிசற் பிளவிலே
மாசென நிலைக்கிற வடுப்போல், ஓர் உடல்
நோயுற, பின்பு பெம்மான் முழு அருள்
தோயலால் துய்யதே ஆகினும்,
புறத்தே
தழும்போ திட்டோ, விழிகள் அறியொணாப்
பழுதெதோ ஆழ அடியிலே குறை எனத்
துஞ்சலாம், அறிக நீ!" எனவும்
"அதனால்
அஞ்சேல் இதற்கே! பெற்ற அவ் அருட்செயல்
நெஞ்சு நீ இருந்த்த தையல் நாயகி
புள்ளி இதன் மேல் பொலிகுவள்" எனவும்
உள்ளம் உணர்ந்தேன் -- வைத்திய நாத, அத்
தள்ளரும் ஆறுதல் தருதற்குப்
புள்ளிருக்கும் வேளூர் பொலிந்த தேவே!

யோசனை***: 26-7-66*** மாலை *7;* யாத்து***: 27-7-66*** காலை *7* மணி